Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.NO. 148/2015

Deposition of witness for: PW -9

| | | | |
|---|---|---|---|
| Name : | **அரிச்சந்திரன்** | Father/Husband Name | : நாராயணன் |
| Caste : | | Calling | : |
| Religion : | | Age | : |
| Date : | 03.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி 2023 வருடம் பணி ஓய்வு பெற்று, தற்போது தேனி மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 25.12.2005-ம் தேதி இரவு 09.00 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது திருவாதவூர் சமயத்துவத்தை சேர்ந்த நாகூர் என்பவரும் அவரது மனைவி என்பவரும் உடம்பில் காயத்துடன் காவல் நிலையத்திற்கு வந்து அவர்கள் ஊரை சேர்ந்த சிலர் தங்களை அடித்துவிட்டதாக கூறி புகார் மனு கொடுத்தனர், புகார் மனுவை பெற்று அவர்களை மருத்துவமனைக்கு சொல்ல சொல்லி மருத்துவர் நமூனா 152/2005 கொடுத்தனுப்பினேன். அவர்கன் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேலூர் காவல் நிலைய மனு ரசீது எண் 711/2005 கொடுத்த புலன்விசாரணைக்காக புகார் மனுவை சார்பு ஆய்வாளர் திரு.சண்முகம்

அவர்களின் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் புகார் தாரர் எனது உறவினரா என்றால் இல்லை. புகார்தாரருக்கு உடம்பில் காயம் ஏதும் இல்லை, நான் கொடுத்த மருத்துவ நமூனா மூலம் தான் அவர் மருத்துவமனைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் எந்த ஒரு சண்டையும் ஏற்படவில்லை புகார்தாரர் கொடுத்த புகாரை பெற்று எந்த ஒரு விசாரணையும் செய்யாமல் மனு ரசீது கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் இந்தவழக்கில் முறையான விசாரணையை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சட்டபடி இவ்வழக்கின் எதிரிகள் குற்றமற்றவர் என்றால் சரியல்ல. பொய்யான காரணங்கள் கூறி நடைபெறாத சம்பவத்திற்கு புகார் பெற்று மனு ரசீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.